DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 30.10.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No.49/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW1 |
| Name | : | சங்கர் |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 30.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜரில்லை). (எதிரிக்காக 355 of BNSS Act–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**

**முதல் விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(12.02.P.M):–**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், ஏற்காடு தொழிலாளர் உதவி ஆணையர், தோட்டங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 20.09.2024–ம் தேதியன்று ஆய்விற்காக ஏற்காடு செம்மநதத்தம் கிராமத்திலுள்ள SPB Plantation என்ற பதிவு பெறாத தோட்ட நிறுவனத்தினை பிற்பகல் 01.30 மணியளவில் என்னால் ஆய்வு செய்ப்பபட்டது.

ஆய்வின் சமயம் பணிபுரிந்து கொண்டிருந்த தொழிலாளர்களிடம் விசாரணை செய்து ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டது. **ஆய்வறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட ஆய்வின் போது 1948–ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டம் பின் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதியின் கீழ் முரண்பாடுகள் கண்டறிப்பட்டன.

முரண்பாடுகள் விதி 27(5) உடன் விதி 28 இவற்றின் படி தோட்ட நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு மஸ்டர் ரோல்

படிவம் V–பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் ஆய்வின் போது அதனை தாக்கல் செய்யவில்லை.

முரண்பாடுகள் விதி 22 தோட்ட நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக குறைந்தபட்ச கூலி சட்ட சுருக்கம் மற்றும் ஆய்வாளரின் பெயர் காட்டும் பலகை படிவம் X ஆய்வின் போது வெளிகாட்டி வைக்கப்படவில்லை.

முரண்பாடுகள் விதி 27(2) தோட்ட நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பள சீட்டு வழங்கப்பட்டது நகல் ஆய்வின் போதும் கேட்டும் தாக்கல் செய்யப்படவில்லை.

முரண்பாடுகள் விதி 27(6) உடன் விதி 28 நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வேலை ஆட்கள் குறித்த படிவம் XI ஆய்வின் போது கேட்டும் தாக்கல் செய்யப்படவில்லை.

முரண்பாடுகள் விதி27(i) உடன் விதி 28 நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கிய விவரம் குறித்த பதிவேடு XII ஆய்வின் போது கேட்டும் தாக்கல் செய்யப்படவில்லை.

அதனை தொடர்ந்து மேற்கண்ட தோட்ட நிறுவனத்தில் வேலை அளிப்பவர்களான திரு. பலராமன் த/பெ. சஞ்சீவி மற்றும் திரு. பிரகாசன் த/பெ. பலராமன் ஆகிய இருவரில் திரு. பிரகாசன் த/பெ. பலராமன் முதன்மை வேலை அளிப்பவராக இருப்பதாக ஆய்வின் போது பணியில் இருந்த எஸ்டேட்டின் கண்காணிப்பாளர் சங்கர் என்பவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் திரு. பிரகாசன் த/பெ. பலராமன் என்பவருக்கு ந.க.எண். 383/2024 நாள் 03.10.2024–ம் தேதியிட்ட ஆய்வு உத்தரவானது பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டது. **ஆய்வு உத்தரவு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேற்கண்ட பதிவு தபாலானது REFUSED – RETUNRED TO SENDER என்று மேற்குறிப்பிட்டு எங்கள் அலுவலகத்திற்கு 16.10.2024–ம் தேதியன்று திரும்ப பெறப்பட்டது. **பதிவு தபால் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**.

(எதிரியின் பெயர் திரு. பிரகாஷ் என்று பதிவு தபால் குறிப்பிடப்பட்டுள்ளது என எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது).

எனவே மேற்கண்ட தோட்ட நிறுவனத்தில் வேலை அளிப்பவரான திரு. பிரகாசன் த/பெ. பலராமன் என்பவர் மீது மேல் நடவடிக்கைக்காக ந.க.எண். 383/2024, நாள் 14.11.2024-ம் தேதியிட்ட விளக்கம் கேட்கும் அறிவிப்பு பதிவு தபால் மூலம் திரு. பிரகாசன் த/பெ. பலராமன் என்பவருக்கு அனுப்பப்பட்டது. **விளக்கம் கேட்கும் அறிவிப்பு அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (எதிரியின் பெயர் திரு. பிரகாஷ் என்று பதிவு தபால் குறிப்பிடப்பட்டுள்ளது என எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது).

மேற்கண்ட விளக்கம் கேட்கும் அறிவிப்பானது 21.11.2024-ம் தேதியன்று திரும்ப பெறப்பட்டது. **திரும்ப பெறப்பட்ட தபாலானது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட விளக்கம் கேட்கும் அறிவிப்பு திரும்ப பெறப்பட்டதால் மேற்படி விளக்கம் கேட்கும் அறிவிப்பு 17.12.2024-ம் தேதியன்று ஏற்காடு செம்மநத்தம் அஞ்சல் தோட்ட நிறுவனத்தின் வாயிற்கதவில் ஒட்டப்பட்டது. **அந்த புகைப்படமானது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (எதிரியின் தரப்பில் புகைப்படத்தின் தொடர்புடமை குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது).

மேற்கண்ட விளக்கம் கேட்கும் அறிவிப்பின் படி வழக்கு சம்மந்தப்பட்ட தோட்ட நிறுவனத்தின் வேலை அளிப்பவரிடமிருந்து எவ்வித பதில் அறிவிப்பும் பெறப்படாததால் மேற்படி நபரின் மீது வழக்கு தொடர அனுமதி வேண்டி ந.க.எண். 383/2024, நாள். 24.12.2024-ம் தேதியிட்ட முன்னனுமதி வேண்டுகோள் கடிதமானது சேலம் தொழிலாளர் இணை ஆணையத்திற்கு அனுப்பப்பட்டது.

அதன் பேரில் முன்னனுமதி உத்தரவானது 28.01.2025-ம் தேதியிட்ட ஒப்புதல் ஆணை பெறப்பட்டு வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **அந்த செயல்முறை ஆணை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

ஆய்வின் சமயம் பணியில் இருந்த தொழிலாளர்களிடம் விசாரணை செய்யப்பட்டு கையெழுத்து பெறப்பட்ட கூடுதல் ஆய்வறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **அந்த கூடுதல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 அக குறியீடு செய்யப்படுகிறது**.(எதிரி தரப்பில் ஆவணத்தில் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது). எனவே, 1948–ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மீறியதற்கு உரிய தண்டனை வழங்குமாறு கனம் நீதிபதி அவர்களை பணிவுடன் கேட்டு இது சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.26.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2025.10.30 12:27:45 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.